# அது ஒரு பொய்க் காலம்

வாசலில் நிற்கிறார் வெங்கடேசன்
ஒளிந்து கொண்டிருக்கிறேன், வீட்டினுள்
எல்லோரும் என்னைத் தேடுகிறார்கள்
கூப்பிட்டுப் பார்க்கிறார்கள்
நான் கொல்லைப் புறமாய்
வெளியில் ஓடிவந்து விடுகிறேன்

என்னை கண்டு கொண்ட வெங்கடேசன்
எட்டிப் பிடிக்க முனைந்தார்,
நான் அகப்படாமல் தப்பிவிட்டேன்.

தம்பி, தம்பி வாங்கய்யா,
அஞ்சே நிமிஷம்தான்.
உங்களுக்கு சிவாஜி மாதிரி வேணுமா?
எம்.ஜி.ஆர். மாதிரி வேணுமா?
தாஜா செய்கிறார் வெங்கடேசன்.

எனக்கு ஜெமினி மாதிரி வேணும்.
உனக்கு அதெல்லாம் தெரியாது.
நீ சம்மர்தான் அடிப்பே.

இல்லைய்யா, அப்படியெல்லாம் செய்யமாட்டேன்.
ஓங்க இஷ்டம் போலவே வெட்றேன்யா,

நிச்சயமா?
நிச்சயமா.
உட்கார்ந்தேன்.

இப்பதான்டா உன் தலை தலையா இருக்குது
சிரித்த அம்மாவை முறைத்தேன்
தம்பிக்கி என்னங்க எப்படி
வெட்னாலும் அழகுதா

வெங்கடேசன் சிரித்தார்

வா வா நான் உனக்கு வெட்டி விடறேன்
எனக் கறுவியதற்கும்

சிரிப்பு
தலையை தடவிக்கொண்டு

சம்மர்

எஸ். அற்புதராஜ்



ஓவியம்: ஜே.கே.